# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:-20** **தேதி:28.06.10**

## அகில இந்திய செய்திகள்

**அமைச்சருடன் சந்திப்பு**: 23.06.10 அன்று எடுத்த முடிவின் அடிப்படையில் கூட்டுப் போராட்டக்குழு கோவையில் 25.06.10 அன்று நமது தொலைத் தொடர்பு அமைச்சர் திரு. ராசா அவர்களை சந்தித்தது. கூட்டு போராட்டக் குழுவின் அமைப்பாளர் தோழர் VAN நம்பூதிரி, மற்றும் பொது செயலர்கள் தோழர்.P.அபிமன்யூ, தோழர் V.சுப்புராமன், தோழர் G.L.ஜோகி, தோழர் பிரகலாத் ராய் மற்றும் தோழர்கள் பங்கேற்றனர். நமது தலைவர்கள் அமைச்சரை சந்திப்பதற்கு முன்னரே BSNL தலைமையகம் BWA ஸ்பெக்ட்ரம் கட்டணமாக ரூ.8,313 கோடியினை அரசுக்கு கட்டிவிட்டது. எனவே நமது தலைவர்கள் 3G மற்றும் BWA ஸ்பெக்ட்ரம் கட்டணங்களை திருப்பித் தர வேண்டும் என கேட்டுக் கொண்டனர். அமைச்சர் தானும் இந்த பிரச்சனையில் பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் ஆகியோரிடம் இது தொடர்பாக விவாதிப்பதாக உறுதி அளித்தார். ஏப்ரல் 20ம் தேதி ஏற்பட்ட உடன்பாட்டில் எந்த ஒரு அம்சத்திலும் முன்னேற்றம் இல்லை என்பதையும் அமைச்சருக்கு கூட்டு போராட்டக் குழுவின் தலைவர்கள் எடுத்துக் கூறினார்கள். அமைச்சர் புது டெல்லி திரும்பியவுடன் அவற்றை பரிசீலிப்பதாக உறுதி கூறினார். கூட்டு போராட்டக் குழு ஓரிரு தினங்களில் புது டெல்லியில் கூடி அடுத்தக் கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக விவாதிக்கும்.

**புதிய பதவி உயர்வுக் கொள்கை**: புதிய பதவி உயர்வுக் கொள்கையில் பல்வேறு மாற்றங்களை செய்யவேண்டும் என நமது மத்திய சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. அதனை தலைமையகம் பரிசீலித்து வருகிறது. எதிர் வரும் தேசீயக் கவுன்சில் கூட்டத்திலும் இது தொடர்பாக விவாதிக்கப்படும். பதவி உயர்வின் சமயத்தில், பதவி உயர்வு தேதிக்கு பதிலாக அடுத்த ஊதிய உயர்வு தேதியில் புதிய ஊதியம் நிர்ணயம் செய்ய விருப்பம் தெரிவித்துக் கொள்ளலாம் என உடனடியாக உத்தரவிட வேண்டும் என நமது மத்திய சங்கம் நிர்வாகத்தை கேட்டுக் கொண்டுள்ளது. இந்த உத்தரவு வெகு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கிறோம்.

**தபால் அட்டை அனுப்பும் போராட்டம்**: நமது கூட்டு போராட்டக் குழுவின் முடிவின் அடிப்படையில் நமது BSNLல் பணிபுரியும் அனைவரிடமும் தபால் அட்டையை பூர்த்தி செய்து பிரதமருக்கு அனுப்புவது என்ற முடிவை உடனடியாக நடத்தி முடிக்க வேண்டும். ஜூலை 5ஆம் தேதிக்குள் இதனை பூர்த்தி செய்வது என்ற முடிவை கறாராக அமுல் படுத்தவும். ஒவ்வொரு ஊழியரையும் சந்தித்து இந்த வார இறுதிக்குள் தபால் அட்டை அனுப்பும் பணியை முடிக்குமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள
**M.முருகையா,**
பொறுப்பு மாநில செயலர்.